## ஆதிதிராவிடர், பழங்குடியின மக்கள், தொழில்துறையில்

# பல உயரங்களைத் தொட கழக அரசு என்றும் துணை நிற்கும்!

## தொழில்முனைவோர் கண்காட்சியைத் தொடங்கிவைத்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!




ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை சார்பில் இரண்டு நாட்கள் (26.01.2024 மற்றும் 27.01.2024) நடைபெற்ற தொழில் முனைவோருக்கான கண்காட்சி மற்றும் கருத்தரங்கை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்து, விழா பேருரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழி செல்வராஜ், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத் தலைவர் உ.மதிவாணன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா, தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி, ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் த.ஆனந்த், பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள், தொழில் முதலீட்டாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**சென்னை, ஜன. 28 –**

**ஆதிதிராவிடர், பழங்குடியின மக்கள் – தொழில்துறையில் பல உயரங்களைத் தொட கழக அரசு என்றும் துணை நிற்கும் என்று தொழில் முனைவோர் கண்காட்சியைத் தொடங்கி வைத்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) காலை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில் முனை வோருக்கான கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் நடைபெற்றது.

விழாவில் கலந்துகொண்டு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கண்காட்சியைத் தொடங்கி வைத்து உரையாற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது:

“எல்லோருக்கும் எல்லாம் என்ற கொள்கையோடு செயல்பட்டு வருகின்ற நம்முடைய திராவிட மாடல் அரசு சார்பாக, தமிழ்நாடு `வேர்ல்டு ஆந்த்ரபிரனர்ஸ் ஆதி திராவிடாஸ் அண்டு ட்ரைபல்ஸ்’ எனும் தொழில்முனைவோருக்கான கண்காட்சி மற்றும் கருத்தரங்கைத் தொடங்கி வைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். பெருமை அடைகின்றேன்.

இந்த வாய்ப்பை எனக்கு அளித்த நம்முடைய அமைச்சர் அக்கா கயல்விழி செல்வராஜ் அவர்களுக்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். வந்திருக்கக்கூடிய அத்தனை பேருக்கும் முதலில் என்னுடைய குடியரசு தின நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

**உலக முதலீட்டாளர்கள் மாநாடு!**

இதே அரங்கில் உலகமே போற்றுகின்ற வகையில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை (குளோபல் இன்வெஸ்டர்ஸ் மீட்) சில நாட்களுக்கு முன்பு, கழக அரசு இங்கு நடத்திக் காட்டியது.

இந்த நிகழ்ச்சியில் நான் பங்கேற்பேனா என்ற சந்தேகம் நம்முடைய அமைச்சருக்கு இருந்தது. கடந்த ஒரு வாரமாக நாடாளுமன்றத் தேர்தல் பணிகளை ஆரம்பித்து விட்டோம். முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் நாடாளுமன்றத் தேர்தலை சந்திப்பதற்காக பல குழுக்கள் அமைத்திருக்கிறார்கள்.

அந்தப் பணிகளுக்காக, நான் யாருக்கெல்லாம் தேதி கொடுத்தேனோ, அத்தனையும் ரத்துச் செய்துவிட்டேன். இந்த நிகழ்ச்சிக்கும் நான் வராமல் இருந்துவிடுவேனோ என்று உங்களுடைய அமைச்சர் கயல்விழி செல்வராஜ் அவர்கள் நினைத்துக் கொண்டிருந்தார்கள். நேற்று வரை எனக்கு ஞாபகப்படுத்திக் கொண்டே இருந்தார்கள்.

‘எந்த நிகழ்ச்சியை ரத்து பண்ணினாலும், இந்த நிகழ்ச்சியை நான் ரத்து செய்யமாட்டேன். இது எங்களுடைய நிகழ்ச்சி. நான் வந்துதான் ஆவேன்’ என்று சொல்லி அனுப்பிவைத்தேன். அந்தப் பெருமையுடன் அந்த மகிழ்ச்சியுடன் தான் நான் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருக்கிறேன்.

பட்டியல் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கின்ற வகையில் நம்முடைய அரசு இந்தச் சிறப்பான நிகழ்ச்சியை இன்றைக்கு நடத்திக் கொண்டிருக்கிறது.

**350க்கும் அதிகமான அரங்குகள்!**

கிட்டத்தட்ட 350-க்கும் அதிகமான அரங்குகள், 5 ஆயிரத்திற்கு மேல் உற்பத்திப் பொருட்கள், 20 ஆயிரத்துக்கும் அதிகமான பார்வையாளர்கள், இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள இருக்கின்றார்கள்.

1962 ஆம் ஆண்டு மாநிலங்களவையில் பேரறிஞர் அண்ணா ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டுப் பேசியிருந்தார். தமிழ்நாட்டுக்குத் தொழில் வேண்டும். அந்தத் தொழில் எல்லாருக்கும் வேண்டும் என்று பேசியிருந்தார். அந்தக் கனவை நிறைவேற்றியவர்தான் நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

**மறுக்கப்பட்ட துறைகளை மக்களுக்கான துறைகளாக மாற்றிக் காட்டியவர்!**

எந்தத் துறையில் எல்லாம் பிறப்பின் பெயரால் வாய்ப்பு மறுக்கப்பட்டதோ, அந்தந்த துறைகளை யெல்லாம் அனைத்து மக்களுக்குமான துறையாக மாற்றிக் காட்டியவர் தான் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். குறிப்பிட்ட ஒரு பிரிவினர் மட்டுமே படிக்க வேண்டும் என்று சொன்னார்கள். குடும்பத்தொழில் மட்டும்தான் செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். அதை எல்லாத்தையும் உடைத்து எல்லாருக்கும் கல்வியைக் கொண்டு சேர்த்ததுதான் நம்முடைய திராவிட இயக்கம் என்பது உங்களுக்குத் தெரியும்.

> “திறன் சார்ந்த பயிற்சிகளையும் கொடுத்துக்கொண்டு வருகிறது. கலைஞரின் இந்த முயற்சியால்தான் இந்தியாவிலேயே ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் அதிக எண்ணிக்கையில் தொழில்முனைவோர்களாக இருக்கின்ற மாநிலம் என்ற பெருமை, இன்றைக்கு தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. இதற்குப் பெயர்தான் உண்மையான எல்லோரையும் உள்ளடக்கிய உண்மையான வளர்ச்சி.”

குறிப்பாக, ஆதிதிராவிடர் பட்டியல் இனத்தைச் சேர்ந்த பிள்ளைகள் பள்ளிக்குச் செல்ல வேண்டும். கல்லூரிக்குச் செல்ல வேண்டும் என்று ஏராளமான திட்டங்களைக் கொண்டு வந்தவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். கல்வி உதவித்தொகை, பஸ் பாஸ், சத்தான மதிய உணவு... இப்படிப் பார்த்து பார்த்து பல திட்டங்களைத் தீட்டியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

அதன் தொடர்ச்சியாக இன்றைக்குத் தொழில்துறையை ஜனநாயகப்படுத்திய பெருமை, தொடர்ந்து அதற்காக உழைக்கும் நம்முடைய தலைவர் முதலமைச்சர் அவர்களையும் சேரும்.

**அதிக தொழில்முனைவோர் உள்ள மாநிலம்!**

இந்தத் தொலைநோக்குப் பார்வையோடுதான் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வாரியம் தாட்கோ-வை 1974-ஆம் ஆண்டு கிட்டத்தட்ட 50 வருடங்களுக்கு முன்பு நம்முடைய கலைஞர் அவர்கள் தொடங்கினார்கள். ஆரம்பத்தில், அந்த வாரியம் வீடு கட்டி கொடுக்கின்ற ஒரு அமைப்பாக இருந்தாலும், இன்றைக்கு அது பல தொழில் முனைவோர்களை உருவாக்க உதவி புரிந்து வருகின்றது.

திறன் சார்ந்த பயிற்சிகளையும் கொடுத்துக்கொண்டு வருகிறது. கலைஞரின் இந்த முயற்சியால் தான் இந்தியாவிலேயே ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் அதிக எண்ணிக்கையில் தொழில் முனைவோர்களாக இருக்கின்ற மாநிலம் என்ற பெருமை, இன்றைக்கு தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. இதற்குப் பெயர்தான் உண்மையான எல்லோரையும் உள்ளடக்கிய உண்மையான வளர்ச்சி.

கலைஞர் வழியில் செயல்படுகின்ற நம்முடைய திராவிட மாடல் அரசு தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் காட்டிய சமூக நீதிப் பாதையில் வெற்றி நடை போட்டுக் கொண்டிருக்கிறது. கலைஞர் அவர்கள் விட்டுச் சென்ற அந்தப் பணிகளை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்லவேண்டும் என்ற உணர்வோடு நம்முடைய முதலமைச்சர் அவர்களும் பல்வேறு நலத்திட்டங்களைத் தீட்டி வருகின்றார். அதற்கு ஒரு சாட்சிதான் இந்த நிகழ்ச்சி.

**தென்னிந்தியாவிலே மிகப்பெரிய கண்காட்சி!**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கின்ற வண்ணம் தென்னிந்தியாவிலே இவ்வளவு மிகப்பெரிய ஒரு கண்காட்சி நடக்கின்றதென்றால், அது தமிழ்நாட்டில் மட்டும்தான் நடந்துகொண்டிருக்கிறது.

இதை நான் கண்காட்சி என்று சொல்ல விரும்பவில்லை. ஏனென்றால் கண்காட்சி என்றால், என்ன என்று பார்த்து விட்டுப் போய்விடுவார்கள். அதற்குப் பெயர்தான் கண்காட்சி. தொழில்துறையில் சாதிக்க நினைக்கின்ற பல்லாயிரக் கணக்கான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்கள், இளைஞர்கள் பயனடையச் செய்கின்ற மாபெரும் நிகழ்ச்சியாக இருக்க வேண்டும். அதனால்தான் நான் சொல்கிறேன் இது கண்காட்சி மட்டுமில்லை என்று.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற இலக்கை நிர்ணயித்துள்ளார். அந்த இலக்கை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கிறார். தமிழ்நாட்டை அதை நோக்கிய வளர்ச்சிப் பாதைக்கு அழைத்துச் சென்று கொண்டிருக்கிறார். ஒரு ட்ரில்லியின் டாலர் பொருளாதாரம் என்றால் குறிப்பிட்ட சிலருடைய கையை மட்டும் பிடித்து அழைத்துச் சென்றால், அந்த இலக்கை நம்மால் அடைய முடியாது. எல்லோரும் சேர்ந்து அனைவரும் அனைவரின் கைகளையும் பிடித்து நடைபோட்டால்தான் அது சாத்தியமாகும்.

**பிறக்கும்போதே யாரும் முதலாளியாகப் பிறப்பதில்லை!**

பிறக்கும்போதே யாரும் முதலாளியாகப் பிறப்பதில்லை. முயற்சி செய்தால் யாருமே முதலாளி ஆகலாம் என்பதற்கு உதாரணம்தான் இன்றைக்கு நடக்கக்கூடிய இந்த நிகழ்ச்சி. அந்த வகையில்தான் நம்முடைய திராவிட மாடல் அரசு, ஆதிதிராவிடர்கள், பழங்குடியின மக்கள் தொழில்துறையில் சாதிக்க வேண்டும் என்று ஏராளமான திட்டங்களை, இன்றைக்கு செயல்படுத்தி இருக்கிறது. சமூக நீதி என்பது எல்லா இடத்திலும் எல்லாத் துறையிலும் இருக்க வேண்டும் என்று சிந்திப்பவர்தான், நினைப்பவர்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

அதனால்தான் தொழில்முனைவோருக்கான சமூக நீதியை உறுதி செய்கின்ற நோக்கில், தமிழ்நாடு பட்டியலினத்தவர், பழங்குடியினர், புத்தொழில் நிலையத்தை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கடந்த நிதியாண்டில் உருவாக்கினார்கள். முதல் ஆண்டில் 30 கோடி ரூபாய் நிதியுடன் தொடங்கப்பட்டது. இதன் மூலம் பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர் நடத்துகின்ற 21 நிறுவனங்கள் ரூபாய் 28 கோடி அளவுக்குப் பயன் அடைந்தது.

அதன் காரணத்தால், இந்த ஆண்டு தமிழ்நாடு பட்டியலினத்தவர், புத்தொழில் நிலையத்துக்கான நிதியை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 50 கோடியாக உயர்த்திக் கொடுத்தார்கள். இந்த முறை 26 நிறுவனங்கள் அதில் பயனடைந்திருக்கின்றன. இதில் மிக முக்கிய மான விஷயம் என்னவென்றால், அந்த 26 நிறுவனங்களில் 13 நிறுவனங்கள் 50 சதவிகித நிறுவனங்கள் பெண்களால் நடத்தப்படுபவை என்பது இங்கு மிகவும் பெருமையான விஷயம்.

**அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்!**

இன்றைக்கு இந்தியாவிலேயே அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பெயரில் உற்பத்தி வணிகம் மற்றும் சேவை சார்ந்த தொழில்களைத் தொடங்குவதற்கு அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் என்ற திட்டத்தைச் செயல்படுத்துகின்ற ஒரே மாநிலம் நம்முடைய தமிழ்நாடு மட்டும் தான். இந்தத் திட்டத்தின் மூலம் தொழில் தொடங்க விரும்பும் பட்டியல் மற்றும் பழங்குடியினர் மக்களுக்கு 35 சதவிகிதம் வரை மானியமும், ஒன்றரை கோடி ரூபாய் வரை கடன் உதவியும் வழங்கப்படுகின்றது.

இந்தத் திட்டத்திற்காக நடப்பு நிதி ஆண்டில் மட்டும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 100 கோடி ரூபாய் நிதியை இதற்கு ஒதுக்கி இருக்கிறார்கள். இதனால் யார் பயன் அடைகிறார்கள் என்று சிலர் கேட்பார்கள். நம்முடைய அரசின் முயற்சியால் அரியலூர் மாவட்டத்தில் மட்டும் 2,000 பேர் பயனடைந்து இருக்கிறார்கள் என்பது நமக்கு மிகப்பெரிய ஒரு பெருமையான ஒரு விஷயம்.

> “இன்றைக்கு இந்தியாவிலேயே அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பெயரில் உற்பத்தி வணிகம் மற்றும் சேவை சார்ந்த தொழில்களைத் தொடங்குவதற்கு அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் என்ற திட்டத்தைச் செயல்படுத்துகின்ற ஒரே மாநிலம் நம்முடைய தமிழ்நாடு மட்டும்தான். இந்தத் திட்டத்தின் மூலம் தொழில் தொடங்க விரும்பும் பட்டியல் மற்றும் பழங்குடியினர் மக்களுக்கு 35 சதவிகிதம் வரை மானியமும், ஒன்றரை கோடி ரூபாய் வரை கடன் உதவியும் வழங்கப்படுகின்றது.”

சமூகத்தில் இருக்கின்ற ஏற்றத் தாழ்வை நீக்கி, சுயமரியாதை, சமத்துவம், ஒடுக்கப்பட்டோருக்கு கொடுக்கவேண்டிய அதிகாரம் என்ற நிலையை நோக்கிய பயணத்தை எந்தவித சமரசமும் இன்றி நம்முடைய திராவிட மாடல் அரசு அதை முயற்சி செய்து எடுத்துக் கொண்டிருக்கிறது.

கல்வியில் சாதித்துள்ள ஆதிதிராவிடர், பழங்குடியினர் மக்கள் தொழில் துறையில் இன்னும் பல உயரங்களைத் தொட கழக அரசு என்றைக்கும் துணை நிற்கும். இந்த இரண்டு நாள் நிகழ்ச்சி அதற்கான அடித்தளத்தை அமைத்துக் கொடுக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

இதனை இங்கு வந்திருக்கின்ற அனைவரும் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் ஒவ்வொருவரும் தொழில் முனைவோராக உருவாக வேண்டும், உயர வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் நான் சுற்றுப் பயணம் செய்யும்பொழுதும், காலையில் எழுந்து அரசுப் பள்ளி மாணவர்களுடன்தான் என்னுடைய காலை உணவு. முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் அவர்களுடன் சேர்ந்துதான் சாப்பிடுவேன். அப்படி ஆரம்பிக்கின்ற என்னுடைய நாள் அடுத்து ஆய்வுக்கூட்டங்கள், கழக நிகழ்ச்சிகள் எல்லாம் முடித்துவிட்டு, கடைசியாக ஒரே ஒரு விஷயத்தை மறக்காமல் செய்வேன்.

அது என்னவென்றால் அங்கு இருக்கக்கூடிய ஆதிதிராவிடர் விடுதிக்குச் சென்று அந்த மாணவர்களின் நலனை விசாரித்து, அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சாப்பாடு தரமாக இருக்கிறதா? அவர்களுக்கான வசதிகள் செய்யப்பட்டு இருக்கிறதா? என்று ஒவ்வொரு மாவட்டத்திலும் நான் ஆய்வு செய்கிறேன்.

எனவே, அந்த அளவுக்கு இந்த அரசு உங்கள் மீது மிகுந்த அக்கறையோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே நீங்கள் உருவானால் மட்டும் போதாது. உங்களைச் சார்ந்தவர்களையும், தொழில் முனைவோர்களாக்க நீங்கள் பாடுபட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், கயல்விழி செல்வராஜ், தாட்டோ தலைவர் மதிவாணன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, மு.பெ.கிரி, பிரபாகரன், வெங்கடேசன், பரந்தாமன், தாட்கோ மேலாண்மை இயக்குநர் கந்தசாமி, துறையின் செயலாளர் லட்சுமி ப்ரியா, துப்புரவு நலவாரிய துணைத் தலைவர் செ.கனிமொழி, ஆலந்தூர் பகுதி செயலாளர்கள் குணாளன், சந்திரன், இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

---

### கண்காட்சியை அனைவரும் பார்ப்பதன் மூலம்

## ஆதி திராவிடர் – பழங்குடியின மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கு உத்வேகமாக அமையும்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை,ஜன.28 –

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.1.2024) காலை சென்னை வர்த்தக மையத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில் முனைவோருக்கான மாபெரும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கத்தினை (TN BEAT Expo 2024) தொடங்கி வைத்தார்கள். இந்த கண்காட்சி ஜனவரி 26, 27 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்றது.

இந்த மாபெரும் கண்காட்சியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரால் தயாரிக்கப்பட்ட 8,000க்கும் மேற்பட்ட பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. 5,000க்கும் மேற்பட்ட விற்பனைப் பொருள்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இந்த கண்காட்சியில் 410க்கும் மேற்பட்ட காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. 20,000க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் இந்த கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டு மகிழ்ந்து பாராட்டினர்.

**முதல்வரின் சமூக வலைதளப் பதிவு!**

இதுகுறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், இது குறித்து சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில் முனைவோருக்கான மாபெரும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கத்தினை வாய்ப்புள்ள அனைவரும் சென்று பார்க்க வேண்டும்.**

**உங்களது வருகை ஆதி திராவிட பழங்குடியின மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கு உத்வேகமாக அமையும்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.